3rd March 1959]

கம்-என்ஜினியரிங் வொர்க்ஷாப்' 2 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பயிற்சி நிலையங்களை மற்ற 'ஆப்டர்கேர்' நிலையங்களிலும் ஏற்படுத்துவதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்துவருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பொதுவாக கைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் சீராக வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் என்ன செய்யக்கூடுமோ அது செய்யப்பட்டுத்தான் வருகிறது.

SRI A. A. RASHEED: For how long these discharged prisoners are maintained in these institutions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I am sorry I cannot give the information as to the exact period for which they are kept in these institutions.

SRI A. GOVINDASAMY: மத்திய சிறையிலுள்ள அச்சடிக்கும் தொழிற்சாலைகளில் குற்றவாளிகள் அந்தத் தொழிலில் ஈடுபட்டு வேலை செய்து சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கு ஏதோ கூலி கொடுப்பதாக கணக்கு எழுதி வருகிறார்கள். அவர்கள் விடுதலையாகி வெளியே வருகின்ற நேரத்தில் அவர்கள் எதிர்கால வாழ்க்கைக்கு உதவிகரமாக அவர்கள் எவ்வளவு சம்பாதித்தார்கள் என்பதைக் கணக்கிட்டு அந்தத் தொகையை அவர்களுக்கு கொடுத்து உதவி செய்ய சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவ்வாறு ஒன்றும் யோசனையில்லை. இப்பொழுது இருக்கும் சிறை விதிகளின்படி அவர்களுக்கு என்ன சலுகைகள் அளிக்கப்படுமோ அவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் சிறையிலிருந்து வெளிவந்தபிறகும், அவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டு வேலை செய்வதற்கும் "டிஸ்சார்ஜ் பிரிஸனர்ஸ் எய்ட் சொசைடி" மூலம் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

Tamil Nad N.G.O. Union

* 523 *Q*.—SRI M. P. SARATHI: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தமிழ்நாடு என். ஜி. ஓ. யூனியன் பொதுநல நிதிக்கு (Common Good Fund) 1957–ம், 1958–ம் ஆண்டுகளில் அரசாங்கம் ஒதுக்கிய உதவித் தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM: There was no Government contribution in 1957 and 1958 to the Common Good Fund of the Tamil Nad Non-Gazetted Government Officers' Union.

SRI A. GOVINDASAMY: அதற்கு முந்திய வருஷங்களில் இந்த சகாய நிதி அளிக்கப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: 1954, 1955, இந்த வருஷங்களில் அளிக்கப்பட்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY: அப்படியிருக்கும்பொழுது, அதைத் தொடர்ந்து அளிக்காமல் பின்வரும் ஆண்டுகளில் நிறுத்தியதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதின் மூலமாக உதவி வழங்கப்படுவது மிகவும் குறைவாக இருந்தது, அதன் காரணமாகத்தான் பின்னர் இந்தத் தொகை வழங்கப்படவில்லை. இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கும் 'பே கமிஷன்' இந்த விஷயத்தையும் கவனித்து ஆலோசனை சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.